**ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை - 2010**

---

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்தது என்றும் இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிக்கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் நிதிசார் நிலைமை, அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விளைவுகளது நிதிக்கூற்றுக்கள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

கீழே காணப்படும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 18 இற்கமைய ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறான வாகனங்களின் முன்கொண்டு செல்லப்படும் பெறுமதி மற்றும் அவற்றினது நியாயபூர்வ பெறுமதி என்பவற்றுக்கிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் கிடையாது என்பதை உறுதிசெய்து கொள்ளும் வண்ணம் சபையானது வாகனங்களை மீளப்பெறுமதியிட வில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 3 இற்கமைய, பங்குகளை விற்பனை செய்தமையால் ஏற்பட்ட ரூபா 16,429,168 இழப்பை இறுதிக் கணக்கில் பிறிதாகக் காட்ட வேண்டுமாயினும், அது முதலீட்டு வருமானத்திலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------------

கீழே குறிப்பிடப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ''வியன'' வீடமைப்புக் கடன்திட்டத்தின் கீழ் 2009 திசெம்பர் மாதத்தின் வட்டியாகப் பெறப்பட்ட ரூபா 5,044,101 தொகையை 2010 ஜனவரியின் பெறுவனவாகக் கணக்கிலிட்டு, 2010 திசெம்பரின் பொருட்டுப் பெறவேண்டிய ரூபா 4,822,780 வட்டித் தொகையைக் கணக்கில் சீராக்கல் செய்யாதுவிட்டமையால் ''வியன'' வீடமைப்புக் கடனுக்கான வட்டிப் பெறுவனவைக் கணக்கிலிடுகையில் ரூபா 221,321 கூடுதலாக கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2009 திசெம்பர் மாதத்திற்குரிய கடன் தவணைப்பணப் பெறுவனவினை அடுத்து ஏற்படும் ரூபா 1,980,146 மூலதனக் குறைவை 2010 ஆம் ஆண்டினது பெறுவனவாகச் சீராக்கல் செய்திருந்ததுடன் 2010 திசெம்பர் மாதத்திற்குரிய கடன்தவணைப் பணப் பெறுவனவாகிய ரூபா 8,574,422 சீராக்கல் செய்யப்படாமையால் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ''வியன'' கடன்திட்டத்தில் மூலதனம் ரூபா 6,594,276 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

கீழே குறிப்பிடப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டம் | |
| (i) பிரிவு 5 | சபை 9 அங்கத்தவர்களைக் கொண்டிருக்க வேண்டும். எனினும், 8 அங்கத்தவர்கள் மாத்திரமே நியமிக்கப்பட்டிருந்தனர். |
| (ii) பிரிவு 8(ஏ) | ஏற்பாடுகளின் பிரகாரம், ஆண்டின் இறுதியில் ஒவ்வொரு அங்கத்தவரதும் தனிப்பட்ட கணக்கில் உள்ள செலவு மீதியை அடுத்து வரும் ஆண்டின் செப்தெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் நிதியத்தின் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் அறிவிக்க வில்லை. 2010 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ஏறக்குறைய 85 % சுழற்சி அங்கத்தவர்களின் பொருட்டு கணக்குக் கூற்றுக்களை அனுப்பி வைத்துள்ளதாக தலைவர் அறிவித்திருந்தார். |
| (ஆ) பொது முயற்சிகள் மற்றும் அரச நிர்வாகச் சுற்றறிக்கைகள் | |
| (i) பொது முயற்சிகள் திணைக்களத்தின் 1998 மார்ச் 18 ஆந் திகதிய 130 ஆம் இலக்க மற்றும் 1997 நவம்பர் 19 ஆந் திகதிய 26/47 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கைகள் | 4.2 % ஊழியர் கடன் வட்டி விகிதத்தில் கூட்டுத்தாபன மற்றும் நியதிச்சட்டச் சபைகளது ஊழியர்களுக்குக் கடன் வழங்கப்படலாகாது எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், சபையானது அதற்கு முரணாகச் செயற்பட்டு மேற்குறிப்பிட்ட வட்டி விகிதத்திலோ அல்லது அதற்கும் குறைவான வட்டி விகிதத்தில் ஊழியர்களுக்குக் கடன் வழங்கியிருந்தது. அதற்கமைய, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்படி |

| | | |
|---|---|---|
| | | வட்டி வீதத்தில் வழங்கப்பட்ட ரூபா 309,405,813 கடன்மீதி அறவிடப்பட வேண்டியிருந்தது. |
| | (ii) 2006 ஒக்டோபர் 9 ஆந் திகதிய 29 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | சுற்றறிக்கைக்கு முரணாக, சபையின் தலைவரால் தமது கடமைகளுக்காகவும் சொந்தப் பாவனைககாகவும் இரு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு, அவ்விரு வாகனங்களிற்காகவும் மாதாந்தம் பெட்றோல் வாகனத்திற்கு ரூபா 20,000 வும் டீசல் வாகனத்திற்கு ரூபா 14,000 வும் என எரிபொருளுக்கான படிப்பணம் வழங்கப்பட்டிருந்தது. |
| (இ) | 2000 ஜனவரி 11 ஆந் திகதிய பீஎப்/பீஈ5 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | பொதுத் திறைசேரியின் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் போது ஊக்குவிப்புப் படியாக ரூபா 59,960,950 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2010 திசெம்பர் 14 ஆந் திகதிய 42 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை | இச்சுற்றறிக்கையின் 1 ஆம் 2 ஆம் பிரிவுகளுக்கு முரணாக மீளாய்வாண்டின் போது மிகையூதியமாக ரூபா 40,178,847 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 8 ஆம் பிரிவின் பிரகாரம், சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு விதிவிலக்காக மிகையூதியம் வழங்கப்படுமாயின் அமைச்சரவையின் முன் அங்கீகாரத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். எனினும், சபையானது அதற்கமைய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வில்லை |
| (உ) | 2006 செப்டம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை இணைப்பு II (6) ஆம் பந்தி | சம்பள ஏற்றத்தின் போது நிதிசார் பெறுமதியில் ஏற்படும் குறைவைச் சீராக்கி எதிர்காலத்தில் அதனை வழங்குவதற்குப் பதிலாக பழைய சம்பள அளவுத்திட்டத்தின் கீழ் சம்பள ஏற்றத்தைப் பெற்ற காலப்பகுதிக்கும் |

| | | |
|---|---|---|
| | | அக்குறைவைக் கணிப்பீடு செய்து கடந்து சென்ற காலத்திற்கும் மாற்றங்களை ஏற்படுத்தும் விதத்தில் சம்பள ஏற்றத்திற்கான சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2005 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய 523 ஆம் இலக்க பணிப்பாளர் சபைத் தீர்மானம் | கற்கை நெறிகளின் பொருட்டு உத்தியோகத்தர்களுக்கு மீளளிப்புச் செய்யப்படக்கூடிய அதிகூடிய தொகை ரூபா 10,000 ஆகும். எனினும், 2 சந்தர்ப்பங்களில் அவ்வரம்பை மீறும் விதத்தில் ரூபா 71,750 செலவின மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. |
| (எ) | 2009 யூன் 9 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 4 ஆம் பிரிவு மற்றும் நிதிப் பிரமாணம் 134(3) என்பன. | உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஏ) | இலங்கை அரசாங்கத்தின் நிதிப் பிரமாணம் (நி.பி) 756(1) | முறையான பொருட்கணிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

### 1.2.4 தீர்த்து வைக்கப்படாத மீதி

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முதலீட்டுக்கான வட்டியைப்பெறும் கால வரம்பைக் கடந்து ஓராண்டு பூர்த்தியாகிய ரூபா 26,107,769 மற்றும் 8 ஆண்டுகள் நிறைவடைந்த ரூபா 31,365,629 உடன் மொத்தமாகப் பெறவேண்டிய வட்டி வருமானமாகிய ரூபா 57,473,398 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் மேற்கொள்ளப்படாதிருந்தது.

(ஆ) வாகனப் பிரிவிலிருந்து 2008 ஆம் ஆண்டின் பொருட்டுப் பெறவேண்டிய வாகனத் தரிப்பிடக் கட்டணமாகிய ரூபா 103,484 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(இ) நிறுவனத்தின் சேவையிலிருந்து விலகி 1 முதல் 11 ஆண்டுகள் கடந்திருந்த நிறுவனத்தால் பணிக்கொடைக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதுமான 15 உத்தியோகத்தர்களிடமிருந்து தொடர்ந்து அறவிடப்படாதிருந்த தொகை ரூபா 604,644 ஆகும். 2011 ஏப்ரல் 30 ஆந் திகதியளவிலும் அதனை அறவிடுவதற்கான நடவடிக்கையை சபை மேற்கொள்ளவில்லை.

(ஈ) இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்டபோதும் நிறுவனத்தால் தீர்த்து வைக்கப்படாதிருக்கும் கொடுப்பனவு செய்யவேண்டிய நிலுவை மீதிகள் ரூபா 979,008 ஆகும்.

(உ) சபையின் பொறுப்புகளின் கீழ் காணப்படும் உரிமை கோரப்படாத மரண நலன் கணக்கின் ரூபா 6,699,317 மீதி 1995 இல் இருந்தும் மீளச் செலுத்திய நலன் கணக்கின் ரூபா 11,458,846 மீதி 2001 ஆம் ஆண்டில் இருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரையும் தொடர்ந்து அதிகரித்துள்ளன. எனினும், அம்மீதிகளைத் தீர்த்து வைப்பதில் மந்தகெதி அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாகக் குறிப்பிட்ட தலைவர் "இக் கணக்கு தொடர்பாக நிரந்தர கவனஞ் செலுத்தப்பட்டு அங்கத்தவர்களுக்கு இயலுமான சகல சந்தர்ப்பங்களிலும் அதனைத் தெரிவித்து அத்தொகையை மீண்டும் அவர்களுக்கு வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக" அறிவித்திருந்தார்.

### 1.2.5 போதிய அதிகாரத்தால் உறுதி செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணிப்பாளர் சபையினது அங்கீகாரத்தின் அடிப்படையில் 1999 முதல் அமுல்படுத்தப்படும் நிதிசார் நடைமுறைக் கோவைக்கான அங்கீகாரம் நிதி அமைச்சிடமிருந்தோ அல்லது பொதுத் திறைசேரியிடமிருந்தோ மீளாய்வாண்டு முடிவுவரை பெறப்படாதிருந்தது.

(ஆ) பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெறாது சபையின் உத்தியோகத்தர்களுக்கு 1993 ஆம் ஆண்டு முதல் சீருடை வழங்கப்பட்டிருந்தது. இதன்பொருட்டு மீளாய்வாண்டில் ரூபா 6,872,288 செலவிடப்பட்டிருந்தது.

### 1.2.6 இணங்கிவராத கணக்கு மீதிகள்

இறுதிக் கணக்குகளின் பட்டோலையுடன் துணைப் பதிவேடுகளை இணக்கஞ் செய்கையில் பின்வருமாறு கடன் மீதிகளில் வேறுபாடுகள் நிலவின.

| | கடன்பதிவேட்டு மீதி | பட்டோலை மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வாகனக் கடன் | 571,250 | 739,695 | 168,445 |
| விழா முற்பணம் | - | 25,000 | 25,000 |
| விழாக் கடன் | 1,200 | 11,400 | 10,200 |
| விசேட கடன் | 13,761 | 122,008 | 108,247 |
| விசேட இடர்கடன் | 2,635,763 | 3,224,682 | 588,919 |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சபையின் மீளாய்வாண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகளால் விளைந்த மிகை ரூபா. 14,588,421,261 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா. 14,219,995,203 ஆகும். இதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் மிகை ரூபா. 368,426,058 அதிகரித்திருந்தது. 2010 ஆம் ஆண்டில் முதலீட்டினால் பெறப்பட்ட முதலீட்டு வருமான அதிகரிப்பே இம்மிகை அதிகரிப்பிற்கான காரணமாகும்.

### 2.2 நிதிசார் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினது முன்னைய ஆண்டின் மிகை அதிகரிப்புடன் மீளாய்வாண்டினது மிகை அதிகரிப்பை ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான மிகை அதிகரிப்பு ரூபா 4,068,802,906 ஆல் குறைவுற்றிருந்தது. இதற்கமைய, அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும் பங்கிலாபமானது முன்னைய ஆண்டைவிட 0.5 % ஆல் குறைவுற்றிருந்தது.

(ஆ) நிதிய அங்கத்தவர்களது உரித்து, மொத்த பங்களிப்பு மற்றும் அறிவிக்கப்பட்ட வட்டியினது திரண்ட பெறுமதி என்பவற்றின் 5 ஆண்டுகாலப்பகுதியின் போதான வேறுபாடுகள்

கடந்த 5 ஆண்டுகளின் போது சபையின் அங்கத்தவர்களது மொத்த உரித்தானது மொத்த உதவு தொகையாகவும் திரண்ட வட்டியாகவும் பகிர்விற்குள்ளாகிய நிலை கீழே காணப்படுகின்றது.

| **ஆண்டு** | **மொத்த பங்களிப்புத் தொகை** | **திரண்ட வட்டி** | **அங்கத்தவர் உரித்து** |
|---|---|---|---|
| | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் |
| 2006 | 33,199.20 | 32,499.70 | 65,698.90 |
| 2007 | 36,798.97 | 39,134.10 | 75,933.07 |
| 2008 | 40,712.25 | 48,157.80 | 88,870.05 |
| 2009 | 43,875.10 | 59,181.98 | 103,057.08 |
| 2010 | 48,148.28 | 71,704.59 | 119,852.87 |

மேற்குறித்த தகவல்களின் பிரகாரம், 2010 ஆம் ஆண்டளவில் சபையின் அங்கத்தவர்களது மொத்த உரித்தில் 40% பங்களிப்புத் தொகையாக இருந்ததுடன் 59% திரண்ட வட்டியாகவும் இருந்தது. அவ்வாறே, 2009 ஆம் ஆண்டிற்கு இணையாக 2010 ஆம் ஆண்டில் அங்கத்தவர்களது மொத்த உரித்து 16% இனால் அதிகரித்திருந்தது. எனினும், அவ்வாண்டில் மொத்த பங்களிப்புத் தொகை 9 % ஆல் மாத்திரமே அதிகரித்திருந்தது.

## 2.3 முதலீடும் முதலீட்டு வருமானமும்

மீளாய்வாண்டின் ஆரம்ப தினத்தில் ரூபா. 101,235 மில்லியன் ஆகவிருந்த முதலீடு, கொள்வனவுகள் மற்றும் காலமுதிர்வு என்பவற்றிற்கான சீராக்கல்களின் பின்னர் ஆண்டின் இறுதியில் மீதி ரூபா. 118,984 மில்லியன் வரை அதிகரித்திருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கெரவலபிடிய அனல்மின் செயற்திட்ட முதலீடு தொடர்பாக 2010 ஆம் ஆண்டின்போது பெறவேண்டிய மொத்த வட்டியில் நிறுத்தி வைத்த வரியைக் கழித்ததன் பின்னர் பெவேண்டிய ரூபா 182,879,240 தொகை 2011 ஏப்ரல் 30 அன்றும் பெறப்படாதிருந்தது.

(ஆ) குறுகியகால ரீபோ முதலீடு

----------------------------------

2007 ஆம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு ஆண்டும் சபையால் புதுப்பிக்கப்படும் அடிப்படையில் இலங்கை வங்கியில் ரூபா 500,000,000 ரீபோ முதலீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதில் ரூபா 490,000,000 முதலீட்டிற்கு சபையின் அங்கீகாரம் பெறப்படாது தலைவரின் அங்கீகாரம் மாத்திரமே பெறப்பட்டிருந்தது.

(இ) பங்கு முதலீடு

----------------------

(i) கம்பனிப் பங்குகளில் முதலீடு செய்யப்பட்டுள்ள போதிலும் மூலதன வர்த்தகச் சந்தையில் நெடுங்காலமாகக் கொடுக்கல் வாங்கல்கள் இல்லாதிருப்பதால் மூலதன இலாபமோ அல்லது பங்கிலாபமோ வருமானமாகப் பெறாது 12 கம்பனிகளில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 59,294,528 பயனற்றிருந்தது. மேலும் மீளாய்வாண்டளவில் அக்கம்பனிகளுள் 3 கம்பனிகள் கணக்கொழிப்பு நடவடிக்கைகளுக்கு உட்பட்டிருந்தன.

(ii) மீளாய்வாண்டின் போது கம்பனிப் பங்குகளில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 181,000,085 தொடர்பாக மூலதன இலாபமாகப் பெறப்பட்ட தொகை ரூபா 1,206,512 ஆகும். பங்கிலாப வருமானம் பெறப்படவில்லை.

(iii) தனிப்பட்ட கம்பனி ஒன்றினது ரூபா 29,393,665 கிரயமான 1,075,690 பங்குகள் மீளாய்வாண்டின் போது ரூபா 12,964,496 க்கு விற்பனை செய்யப்பட்டன. இதனால் சபைக்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 16,429,168 ஆகும். 1994 தொடக்கம் இக்கம்பனியின் பங்குகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 1998 முதல் அப்பங்குகள் பயனற்றுப் போனமையால் மூலதன இலாபத்தைப் பெறமுடியாது போயிற்று. மேலும், 1998 மற்றும் 2005 ஆண்டில் மாத்திரம் அக்கம்பனியிலிருந்து பங்கிலாப வருமானமாக

முறையே ரூபா 5,378,845 வும் ரூபா 1,085,400 வும் பெறப்பட்டிருந்தன.

**2.4 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உடன்படிக்கை மீறல் தொடர்பாக வெளிநபர்களால் இழப்பீடு கோரித் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றில் எதிர் மனுதாரர் எனும் வகையில் சரிவர விடயங்களை நீதிமன்றத்திற்குத் தெரிவிக்க நடவடிக்கை எடுக்காதுபோன காரணத்தால் ரூபா 21.9 மில்லியனை இழப்பீடாகச் செலுத்த வேண்டியதாயிற்று. தலைவரின் பதிலில் ‘‘இது தொடர்பாக விண்ணப்ப நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.’’ எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் ஒரு வங்கிக் கணக்கில் 2008 முதல் 2010 திசெம்பர் 31 வரை ரூபா 17,230,663 காசுக் கட்டளைகள் வைப்பிலிடப்பட்டு 2011 ஏப்ரல் 30 அன்றும் அவை தேறாது இருந்தன.

(இ) முதிர்வடைந்த போதிலும் மீளாய்வாண்டு வரை அறவிடப்பட முடியாதுள்ள ரூபா 19,624,641 முதலீடு மற்றும் பெறவேண்டிய வட்டியாகிய ரூபா 33,365,633 என்பவற்றிற்குச் சபை நிதியேற்பாடு மேற்கொண்ட போதும் இம்முதலீட்டையும் வட்டியையும் அநேக ஆண்டுகளாகச் சபையால் அறவிடமுடியாதிருந்தது.

(ஈ) 2010 பெப்ரவரி 16 அன்று களஞ்சியத்தில் பெறப்பட்ட ரூபா 553,874 பெறுமதியான விழிப்புணர்வுப் பத்திரக் கையிருப்பானது கணக்காய்வுத் தினமான 2011 ஜனவரி 24 ஆந் திகதியளவிலும் பயன்படுத்தப்படாதிருந்தன.

## 2.5 இனங்காணப்பட்ட இழப்புகள்

----------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 12,996,933 கிரயமான நிலையான சொத்துக்களது தேய்மானம் கழித்த பெறுமதி ரூபா 2,044,420 ஆகும். இத்தொகையைப் பதிவழிப்பதற்கு அங்கீகாரம் பெறப்பட்ட போதும் அப்பெறுமதிக்குரிய சொத்துக்களது நிரலோ அல்லது பதிவழிப்பதற்கான காரணத்தைத் தெரிவிக்கும் விபரமோ கணக்காய்விற்கச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) அரச விலைமதிப்பீட்டாளரின் சிபார்சைப் புறக்கணித்து கூடிய வாடகையில் 2 கட்டிடங்களைப் பெற்றமையால், மாதாந்தம் ஏற்பட்ட இழப்பு முறையே ரூபா 35,000 ரூபா 150,000 என்பனவாகும். இதற்கமைய, மீளாய்வாண்டின் போது சபைக்கு எற்பட்ட மொத்த இழப்பு ரூபா 2,220,000 ஆகக் காணப்பட்டது.

## 2.6 பயனற்ற செலவினம்

-----------------------------

சபை உத்தியோகத்தர்களின் பாவனைக்காக 2010 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டுப் பயன்படுத்தப்படாதிருக்கும் எஞ்சிய சீருடைகளின் பெறுமதி ரூபா 1,660,657 ஆகும். சீருடைத் தேவைக்கான தரவுகளைப் பிழையின்றிச் சேகரிக்காது கூடிய கையிருப்பைக் கொள்வனவு செய்தமையால் இவ்வாறாகப் பயனற்ற செலவினம் ஏற்பட்டிருந்தமை புலனாகியது.

## 2.7 அங்கீகாரம் பெறப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------------

சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் மேலதிகநேர வேலைக்கு ஒரு மணித்தியாலத்திற்கு வழங்கப்படும் 1 ½ மணித்தியாலயப் படிக்கு மேலதிகமாக அத்தினங்களில் 8 மணித்தியாலம் முடிவுற்றதும் நாளொன்றிற்கான சம்பளத்தையும் சேர்த்து மேலதிகநேர வேலைக் கொடுப்பனவு வழங்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் போது சபை மேலதிகமாகச் செலவிட்ட தொகை ரூபா 5,379,201 ஆகும். இது சம்பந்தமாக அமைச்சினதும் பொதுத் திறைசேரியினதும் அங்கீகாரத்தைப் பெறவில்லை.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

-----------------------------------------------------------

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபைத் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பங்களிப்புத் தொகைத் தாமதம், தண்டப்பண அறவீடு மற்றும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுதல்

(இ) அறவிடப்பட வேண்டிய தொகை

(ஈ) வருடாந்த அங்கத்தவர் கணக்குக் கூற்றை அனுப்பி வைத்தல்

(உ) காலத்தையொட்டி அதிகாரச் சட்டத்தில் ஏற்படுத்தப்பட வேண்டிய திருத்தங்கள்.

(ஊ) முதலீடு